
தாமரைச் செல்வி



தணிமைக் கழக வெளியீடு

188 ப.

சீறுப்புராணம்

தமிழ்க் 'கா. சு.' நூலகம்
சுவரவடிவுஅகம் - குழித்தலை.

தலைவர் கலைஞர்

பேருரை

—: வெளியீடு :—

திராவிட முன்னேற்றக் கழகம்

" அன்பகம் "

தேனாம்பேட்டை : : சென்னை - 600 018.

32019
894.8115 கு
தொ

© இரண்டாம் பதிப்பு — 1987

விலை ரூ. 1-00

அச்சிட்டோர்: ஜெம்பிரஸ், சென்னை - 1.

இந்நூல்..... தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
சுவரவடிவுஅகம் - குழிக்கனை!

கவி கா மு. ஷெரீப் அவர்களின் பிறந்த நாள் விழாவும், உமறுப் புலவர் யாத்த சீருப் புராணத்திற்கு கவி கா. மு. ஷெரீப் அவர்கள் எழுதிய உரைநூல் வெளியீட்டு விழாவும் 13 — 9 — 85 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. க. அ. அப்துஸ் சமது, கலைக்களஞ்சியம் திரு. அப்துல்ரகீம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு. இரா. முத்துக் குமாரசாமி, புதுக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. சா. அமீது, இசைமுரசு நாகூர் அனீபா, முன்னுள் அமைச்சர் மன்னை திரு. ப. நாராயணசாமி, திரு. ஜி. உமாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

உரைநூலை வெளியிட்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையை இந்நூல் வடிவில் தலைமைக் கழகம் தருகிறது.

சி. டி. தண்டபாணி
வெளியீட்டுச் செயலாளர், தி. மு. க.

சீறுப் புராணம்

தலைவர் கலைஞர் பேருரை

சீறு உரைநூல் வெளியீட்டு விழாவும் அண்ணன் கலைமாமணி கவி. கா. மு. ஷெரீப் அவர்களுடைய 72-வது பிறந்தநாள் விழாவும் சிறப்போடு நடைபெறுகின்ற இந்த மண்டபத்தில் உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காகவும் என்னுடைய இதயமார்ந்த அன்பு வாழ்த்துக்களை அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்களுக்குக் குவிப்பதற்காகவும் நான் பெற்றுள்ள பேற்றினைக் குறித்துப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

விழாத் தலைவர் அன்பிற்குரிய அப்துல் சமது அவர்கள் "சீறுப் புராணம் வெளியீட்டு விழாவிலே கருணாநிதி கலந்து கொள்கிறாரா? புராண வெளியீட்டு விழாவில் கருணாநிதியா?" என்று யாரோ கேட்டதாகச் சொன்னார்.

நான் இந்தப் புராண வெளியீட்டு விழாவிற்கு ஒத்துக் கொண்டதற்குக் காரணம், இது சீறுப்புராணம்—சீறுத புராணம்! 'சீறத்' என்கின்ற அரபுச் சொல் சீறு என்று மாற்றம் பெற்று வரலாறு என்கின்ற பொருள் கொண்டதாயிற்று என்று விழாத் தலைவர் இங்கு விளக்கமளித்தார் என்றாலுங்கூட, சீறுகிற புராணங்கள் இருக்கின்ற நாட்டில் இது சீறுப் புராணமாக இருக்கின்ற காரணத்தால் நான் இந்த வெளியீட்டு விழாவிற்கு ஒப்புதல் அளித்தேன்.

சமது அவர்கள் பதம்பிரித்தே சொன்னார்கள். சீறு என்றால் வரலாறு; புராணம் என்றால் தொன்மையானது — அதாவது பழமையானது என்று.

பழமையானவைகளெல்லாம் எங்களுக்குப் பகைமையான வைகள் அல்ல.

வரலாறு-புராணம் இரண்டும் இணைந்து ஒரு நூலுக்கு பெயர் இருக்கும் போது, புராணத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்ட உரை போன்றவைகளை நான் ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், ஒரு வரலாறு அதிலே இழையோடிக்கொண்டிருக்கின்றது என்கின்ற அடிப்படையிலும், அந்த வரலாற்றுக்குரிய பெருமான் நபிகள் நாயகம் ஒரு பெரும் மார்க்கத்தை - அரிய-அறிவார்ந்த மார்க்கத்தை உருவாக்கி, சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் - இவைகளுக்கு முதலிடம் தந்தார் என்கின்ற அந்தக் காரணத்திலும் அந்த மார்க்கத்தினுடைய தலைவர்-வழிகாட்டி நபிகள் நாயகத்தின் பாலும், அந்த மார்க்கத்தினுடைய முறைகளைக் கடைப்பிடிக்கின்ற இஸ்லாமியப் பெருமக்களின் பாலும் இன்று நேற்றல்ல—நீண்ட நெடுங்காலமாக நாங்கள் நட்பு கொண்டவர்கள் என்று சொல்வதை விட அடிக்கடி நான் சொல்வதைப் போல உறவு கொண்டவர்களாக விளங்குகின்ற காரணத்தாலும் உங்கள் முன்நிற்கிறேன்!

அந்த உறவின் அடிப்படையிலேதான் நான் இங்கே கவி. கா. மு. ஷெரீப் என்றுகூட அழைக்காமல் அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் என்று அழைத்தேன்.

இந்த விழாவுக்காக அல்ல; எப்போதுமே நான் அப்படித்தான் அவரை அழைப்பது வழக்கம். எனக்கு வயது 62; அவருக்கு வயது 72-இடையிலே பத்தாண்டுக்காலம். இந்த வயதின் அடிப்படையிலேகூட அல்ல; அவர் அரசியலில் — இலக்கியத்தில் — தமிழ் ஆர்வத்தில் பெற்றுள்ள அனுபவம் இவைகளின் காரணமாகவும் அவரிடத்திலே ஓர் உடன்பிறப்பு உணர்வோடு நீண்ட நெடுங்காலமாக நான் பழகி வருகிறேன்.

அவர் தொடக்க காலத்திலே பகுத்தறிவுப் பாசறையிலே தந்தை பெரியார் அவர்களுடைய இயக்கத்திலே தன்னை ஒப்படைத்துக் கொண்டவர்.

அந்த இயக்கத்திலே இன்றைக்கு அண்ணன் ஷெரீப் அவர்கள் இல்லாவிட்டாலுங்கூட, அந்த இயக்கத்திலே அவர் தளபதியாக வீற்றிருந்தபோது அவருக்குத் துணையாக இருந்தவர்களெல்லாம் இன்றைக்கு வெவ்வேறு இயக்கங்களிலே இருந்தாலும்கூட, நட்பின் அடிப்படையிலே அவருடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாடவும், ஓர் அரிய நூலின் உரை

வெளியிடப்படுகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்கின்ற பேரார்வத்தோடும் பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் இங்கு வந்திருப்பதைக் காணுகிறேன்.

அதைக் காணுகிற நேரத்தில், அண்ணன் கவி, கா. மு. ஷெரீப் அவர்கள் எந்த அளவிற்கு இனிய பண்புடையவராக — எல்லோரையுங் கவரத்தக்க குணம் வாய்ந்தவராக விளங்குகிறார் என்பதற்கு இதைத் தவிர வேறு எடுத்துக்காட்டு இருக்க முடியாது.

அரசியலில் தொடக்க காலத்திலே அவர் பெரியாருடைய பாசறையிலே இருந்தாலுங்கூட, அதற்குப்பிறகு இடைப்பட்ட காலத்தில் நானும் அவரும் மோதிக்கொண்ட நிகழ்ச்சிகளெல்லாங் கூட உண்டு.

முப்பத்தைந்து அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிளரியம் என்கின்ற ஊரில் ஆற்று மணற்பரப்பிலே நான் கலந்து கொள்கின்ற கூட்டம்.

அதற்குப் பக்கத்திலே நூறு கஜ தூரத்திலே அவர் கலந்து கொள்கின்ற மாற்றுக் கட்சிக் கூட்டம்!

அவர் கலந்து கொண்ட கூட்டம், காங்கிரஸ் இயக்கத்தினுடைய கூட்டம். நான் கலந்து கொண்ட கூட்டம் திராவிடர் கழகத்தினுடைய கூட்டம்.

நாவலர் அவர்களும் நானும் கிளரியத்திலே பொதுக் கூட்டத்திலே பேச ஒப்புதல் அளித்திருந்தோம்.

அந்தக் கூட்டத்திலே பேசுவதற்கு நாவலரும் நானும் சென்றோம்.

சென்றவுடன், எங்கள் கூட்டத்திற்கு அருகிலேயே காங்கிரஸ் கூட்டம் நடைபெறுகிறதென்றும், அதிலே அண்ணன் ஷெரீப் உள்ளிட்ட முக்கியமானவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்றும், எப்படியும் பெரும் அமளி ஒன்று இரு கூட்டத்தாருக்கிடையே நடைபெறுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் கேள்விப்பட்டோம்.

உடனடியாக நாங்கள் மன்னைக்கு — நம்முடைய மன்னை நாராயணசாமி அவர்களுக்குச் செய்தியனுப்பினோம்.

மன்னை அவர்கள் தகுந்த ஏற்பாடுகளோடு அங்கு வந்து சேர்ந்தார்.

என்ன ஏற்பாடுகள் என்பது அண்ணன் ஷெரீப் அவர்களுக்குத் தெரியும்.

அப்போதெல்லாம் அப்படித்தான் கூட்டங்களை நடத்த வேண்டியிருந்தது. வேல்கம்பு, ஈட்டி, பாணை, கட்டாரி, தடிகள் இவைகள் புடைசூழத்தான் நாங்கள் மேடையில் நிற்கமுடியும்.

இப்படியெல்லாம் அரும்பாடுபட்டுக் கரடு முரடான பாதைகளைச் செப்பனிட்டவர்கள் நாங்கள். இன்றைக்கு அந்தப் பாதையிலே யாராவது காரிலே போய்க்கொண்டிருக்கலாம்.

ஆனல் அன்றைக்கு அத்தகைய அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் இருந்த அந்தக் காலகட்டத்திலேகூட, இன்னும் இரண்டொரு நிமிடங்களில் எப்படிப்பட்ட கலாம் வினையுமோ; கிளரியம் ஆற்றுப் படுகையில் எத்தனை பேர் இரத்தம் சிந்த நேரிடுமோ என்கின்ற அந்த பீதிக்கிடையிலே கூட, அந்தக் கூட்டம் நடைபெற்ற போது நூறு கஜதூரத்துக்கு அப்பால் அண்ணன் ஷெரீப் பேசுகிறார். இப்பால் நான் பேசுகிறேன். நாவலர் பேசுகிறார். ஷெரீப் அவர்கள் அந்தக் கூட்டத்திலே விடுத்த வேண்டுகோளும் அதே போல நாங்கள் இந்தக் கூட்டத்திலே விடுத்த வேண்டுக்கோளும் "நமக்குள்ளே ஆயிரம் மாச்சாரியங்கள் இருந்தாலுங் கூட நாமெல்லாம் தமிழர்கள். நாம் மோதிக்கொண்டு இரத்தம் சிந்துவது கூடாது" என்கிற அடிப்படையிலே அமைந்து — எடுத்துக் கூறப்பட்டு — இரண்டு கூட்டங்களும் சில மணி நேர வித்தியாசத்திலே நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு அதன் பிறகு அன்றைக்கு அந்தக் கூட்டம் நடைப்பெற்றது.

அன்று அண்ணன் ஷெரீப் மாத்திரம் அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்ள வராமல் இருந்திருப்பாரேயானல் அமைதியான சூழ்நிலை உருவாவதற்கு அந்தத் தரப்பிலே யாரும் கிடைக்காமல் போயிருக்கக் கூடும். அமளியிலேதான் அன்றைய நிகழ்ச்சி முடிவுற்றிருக்கக் கூடும்.

இப்படி அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு — எதிர்ப்போடு — மோதுதலோடு ஆரம்பமான எங்களுடைய நட்பு பிறகு மெல்ல மெல்ல ஆனல் உறுதியாக வளர்ந்து வலிவு பெற்றது; கலைத் துறையிலே இருவரும் ஒன்றுக இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

சேலத்திலே மாடர்ன் தியேட்டர்ஸ் என்கின்ற திரைப்பட நிறுவனத்தில் கவிஞராக — திரைப்படங்களுக்குப்பாடல் எழுது பவராக அவர் பொறுப் பேற்றிருந்தார்.

அப்பொழுது நான் இரத்தினம் அவர்கள் நடத்திய ஒரு நாடக மன்றத்திற்குக் குண்டலகேசி இலக்கியத்தை மையமாக வைத்து 'மந்திரிகுமாரி' என்கின்ற ஒரு நாடகத்தை தீட்டித் தந்திருந்தேன்.

அந்த நாடகத்தைக் காண அண்ணன் ஷெரீப் வந்திருந்தார். நாடகத்தைக் கண்ட அவர் சேலம் சென்றவுடன், மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் டி.ஆர்.சுந்தரம் அவர்களிடத்திலே அந்தநாடகத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, டி.ஆர். சுந்தரம் அவர்கள் அந்த நாடகம் நடைப்பெற்ற குடந்தைக்கு அண்ணன் ஷெரீப் அவர்களோடு வந்திருந்து நாடகத்தைக் கண்டு அதனைப் படமாக்க வேண்டும் என்ற அவாவினைத் தெரிவித்து, பிறகு 'மந்திரிகுமாரி' படம் வெளி வந்தது.

இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் நாங்கள் இருவரும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல. அவருக்கும் எனக்கும் நாங்கள் வாழ்ந்த ஊர்களுக்கு இடையிலே பத்து அல்லது பன்னிரண்டு கல் தொலைவுதான். அந்தத் தொலைவுக்கிடையிலே கூட ஒருவருக்கொருவர் போட்டி இருந்தது எழுதுவதிலே; ஆனல் பொருமை தலைக்காட்டிய தில்லை!

அந்தக் காரணத்தினுல் ஒருவரையொருவர் வளர்க்க வேண்டும் — ஊக்கப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணம் எங்களுடைய இதயத்திலே முகிழ்த்து எழுந்தது.

மந்திரிகுமாரிக்கு நான் கதை, உரையாடல் தீட்டிய பொழுது அந்தப் படத்தினுடைய ஒவ்வொரு ஆயிரம் அடியையும் பார்த்துக் களித்துப் பாராட்டி மகிழ்ந்தவர் அண்ணன் கவி. கா. மு. ஷெரீப்.

அவர் எத்தனையோ திரைப்படப்பாடல்கள் எழுதியிருக் கிறார். திரைப்படப்பாடல்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கக் கூடியவைகள் அல்ல. அதிலும் இந்தக் கால திரைப்படப் பாடல் கள் அடுத்த படம் வரக்கூடிய வரையிலேதான் நிலைத்து நிற்கக் கூடியவை.

ஆனல் திரைப்படப் பாடல்களும் கூட நிலைத்துநிற்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் எழுதிய பாடல்கள் சில உண்டு.

இன்றைக்கும் "ஏரிக்கரையின் மேலே போறவளே பெண் மயிலே!" என்கின்ற அந்தப் பாடலைக் கிராமப் புறத்திலே உள்ளவர்களெல்லாம் பாடக் கேட்டு — அவர்கள் அந்தப் பாட்டிலே ஒரு மகிழ்ச்சியை உருவாக்கிக் கொண்டு நடப்பதைக் கண்டு நான் பூரிப்படைந்திருக்கிறேன்.

வானொலியிலோ வேறு இடங்களிலோ அந்தப் பாடல் ஒலிப்பரப்பாகும் போதெல்லாம் நான் அண்ணன் கவி.கா.மு. ஷெரீப் அவர்களை நினைத்துக் கொண்டு ஆனந்தப்படுவேன்!

சேலத்திலே எங்களுக்கிடையே இருந்த கலையுலக வாழ்வு என்றென்றும் மறக்க முடியாத வாழ்வாகும். இருவரும் ஏதோ மாணவர் விடுதி போல மாடர்ன் தியேட்டர்ஸ் உணவு விடுதியிலே தங்கியிருந்து பக்கத்துப் பக்கத்திலே அமர்ந்து உண்டு, பக்கத்துப் பக்கத்துப் பாய்களிலே உறங்கி வாழ்ந்த காலம் என்றென்றும் பசுமையாக நினைவில் இருக்கக் கூடிய காலம்!

இன்றைக்கு அவர் சீரும் புராணத்திற்கு உரை எழுதுகின்ற அளவுக்கு உயர்ந்து இஸ்லாமிய சமுதாயத்திலே ஒரு பெருங் கவிஞராகத் திகழ்கின்ற இந்தக் காலக் கட்டத்திலும், நானும் படிப்படியாக உழைத்துப் பலகட்டங்கள் உயர்ந்து தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பிலே வந்து, அதற்குப் பிறகு இன்றைக்கு மக்களிடத்திலே என்னைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற இயக்கத்திற்கு ஒரு இடம் இருக்கிறது என்கின்ற அளவிலே அந்த இயக்கத்தினுடைய தலைவனாக இருக்கின்ற நானும், அன்று வேளுகுடியிலே ஒரு கொட்டகையிலே எப்படிச்சந்தித்து உரையாடிக் கொண்டோமோ — எப்படித் திருவாரூரிலே ஒரு ஓட்டு வில்லை வீட்டிற்கு வந்து நீங்கள் சேலம் மாடர்ன் தியேட்டர்சுக்கு வர வேண்டும் என்று அழைத்தார்களோ அந்த நட்பு ஒரு துளியும் இடையிலே ஏற்பட்ட அரசியல் புயலால்—சூறுவளியால் சேதமடையவில்லை என்பதை நான் உறுதியாக இங்கே கூறிக் கொள்கின்றேன்.

அதன் அடையாளந்தான் இன்றைக்கு அவருக்கு நடைபெறுகின்ற விழாவிலே நான் கலந்துகொள்கின்ற இந்த நிகழ்ச்சியாகும்.

ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது எத்தனையோ கவிஞர்கள் வந்தார்கள். எத்தனையோ புலவர்கள் வந்தார்கள். அப்போது அவர்கள் என்னைப் பாராட்டிப் பாடாத பாடல்கள் இல்லை; அவர்கள் என்னைப் புகழ்ந்து இசைக்காத கீதங்கள் இல்லை; எழுதாத கவிதைகள் இல்லை.

இப்போது அவர்களை தேடித் தேடிப் பார்க்கிறேன் கிடைக்க வில்லை; வேறிடத்திலே இருக்கிறார்கள்; அங்கே பாடிக்கொண் டிருக்கிறார்கள். நான் பாடுகிறவர்களைச் சொல்லவில்லை. பாடப்படுகின்றவர்களை எச்சரிக்கிறேன்.

அந்தக் காலத்திலே சங்கத்தமிழ்ப் புலவர்கள் பொன்னுக்கோ பொருளுக்கோ பாடியவர்களல்ல. அவர்கள் அரசர்களுக்குக்கூட அறிவுரை கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்; எதிர்க் கருத்துக் களை எடுத்துச் சொல்லக்கூடிய உறுதி வாய்ந்த நெஞ்சம் படைத்தவர்களாக இருந்தார்கள்.

ஒரு மன்னனிடத்திலே பரிசு பெறச் செல்கிறார் ஒரு புலவர். மன்னன் நேரில் வந்து அந்தப் பரிசைத்தரவில்லை என்ற காரணத் திற்காக—பெரும் பரிசு; பொற்கிழி; யானையெல்லாம் கூடத் தரப்பட்டன. ஆனால் மன்னன் நேரிலே வந்து புலவரைச் சந் தித்துத் தரவில்லை; 'இதை வாங்கிக் கொண்டு போகச் சொல்' என்று வேறொருவர் மூலமாக அளிக்கிறான் என்ற காரணத்திற் காக அந்தப் புலவர் ''பரிசும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம் போ'' என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார்.

அப்படிப்பட்ட பெருமிதமான புலவர்கள் சங்க காலத்திலே வாழ்ந்தார்கள்; அவர்களுக்கு இன்றைக்குப் பஞ்சம் வந்து விட்டது. புலவர்களுக்கு பஞ்சம் வந்துவிட்டது என்று சொல்ல வில்லை. அந்த தன்மானப் புலவர்களின் எண்ணிக்கைக்குப் பஞ்சம் வந்து விட்டது.

பஞ்சம் வந்தாலும் பரவாயில்லை; நான் எந்த நிலையிலும் ஆடாமல், அசையாமல், சபலங்கள், சலனங்கள் இவைகளுக்கு ஆட்படக்கூடிய நிலைமைகள் எவையாயினும் அவைகளுக்கு உட் படாமல் உறுதியோடு இருக்கின்ற கவிஞன் என்பதை நிலைநாட்டு கின்ற ஓர் உருவந்தான் அண்ணன் கவி.கா.மு. ஷெரீப் அவர்கள்.

அப்படிப்பட்டவருக்கு 72-வயது இன்றைக்கு தொடங்குகின் றது. அவரை வாழ்த்துவதற்கு கடமைப்பட்டவர்கள் நாம்; வாழ்த் துவதற்கு உரிமையுடையவர்கள் நாம்.

அன்புக்குரிய நண்பர்- இந்த விழாவினுடைய தலைவர் சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அப்துஸ்சமது அவர்கள் இந்த விழாவிற்கு வரவேண்டும் என்பதற்காக சிதம்பரத்திலிருந்து — ஏறத்தாழ இருநூறு கல் தொலைவு வேக வேகமாக வந்திருக்கிறார்.

அண்ணன் அவர்களிடத்தில் அவர் கொண்டிருக்கின்ற பற்று பாசம் இவைகளையெல்லாம்விட, அவர் இங்கே ஒன்றை சொல்ல வேண்டும் என்று எண்ணினார்.

யார் யாரைத் தமிழுக்குத் தந்திருக்கிறோம் தெரியுமா என்று பட்டியல் போட்டுக்காட்டி, கவி.கா.மு. ஷெரீபையும் தந்திருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி — கதையாசிரியர் என்ற பெரும் விருதினைப் பெற்ற மேத்தா கூட கருணாநிதி நடுவராக இருந்து தீர்ப்பளிக்கப் பட்டுப் பரிசு பெற்றவர், அவரையும் தந்திருக்கிறோம்; என்றெல்லாம் சொன்ன அப்துஸ்சமது அவர்களுக்குச் சொல்கிறேன். உங்களைக் கூட நீங்கள் எங்களுக்குத்தான் தந்திருக்கின்றீர்கள். நாங்கள் அப்படித்தான் கருதிக் கொண்டிருக்கிறோம்.

இஸ்லாமிய சமுதாயத்திற்கும் திராவிட இயக்கத்தைச் சார்ந்துள்ள எங்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள உறவு சாதாரணமானதல்ல. யாராலும் பிரிக்க முடியாதது. அப்படிப்பட்ட உறவின் அடிப்படையிலே இந்த உன்னதமான விழாவிலே நான் கலந்து கொள்கின்றேன்.

இங்கே பேராசிரியர் அமீது பேசுகிற நேரத்தில் — நண்பர் உமாபதி அவர்கள் அமீது பேச்சில் குறுக்கிட்டு, பரிமேலழகரைக் குறைசொல்லாதே' என்று குறிப்பிட்டார்.

பரிமேலழகரைக் குறை சொல்ல வேண்டும் என்பது யாருடைய விருப்பமும் அல்ல. ஆனால் பரிமேலழகருடைய உரையிலே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டிய பெருமை எங்களுக்கல்ல; மறைமலையடிகள் போன்ற பெருந் தமிழ்க் காவலர்களெல்லாம் அந்த காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அத்தகையோருக்கே அந்தப் பெருமை சாரும்!

மறைமலையடிகள் சாதாரணமானவர் அல்ல. தமிழுக்காகவே வாழ்ந்தவர் - தமிழுக்காகவே தமது வாழ்நாளைச் செலவிட்டவர். 'தமிழ்! தமிழ்!' என்றுதான் அவருடைய இறுதி

மூச்சு அடங்கிற்று. அப்படிப்பட்டவர்களெல்லாங்கூடப் பரிமேலழகரை மறுத்துக் கருத்துரைத்திருக்கின்றார்கள்.

திருக்குறளுக்கு உரைதந்த பரிதியார், மணக்குடவர் போன்றவர்களில் பரிமேலழகர் ஒருவர். அவர்கள் அந்தக் காலத்திற்கு ஏற்பச் சில உரைகளை எழுதியிருக்கலாம். அல்லது அவர்களுடைய கருத்துக்கு ஏற்பத் திருக்குறளைத் தங்கள் வயப்படுத்திக் கொண்டிருக்கலாம்.

இன்றைக்குக் கூட முற்போக்கு எண்ணம் உள்ள சிலபேர் நம்முடைய எண்ணத்துக்கு ஏதுவாகத் திருக்குறளை எடுத்துக் கொள்ள முற்படும் போது நான் அதை மறுப்பது உண்டு; தடுப்பது உண்டு.

"வள்ளுவர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்; முதல் அதிகாரம் —கடவுள் வாழ்த்துக் கூட வள்ளுவரால் எழுதப் பட்டதல்ல—" என்று கூடச்சிலர் சொல்வதுண்டு, நான் அதை ஏற்றுக் கொள்வதில்லை.

ஏனென்றால் வள்ளுவருடைய காலத்திலே கடவுள் நம்பிக்கை இருந்தது. ஆனால் அந்தக் கடவுள் எப்படி இருக்க வேண்டும்? கடவுள் எத்தன்மை உடையவர்? அவருக்கு உருவம் உண்டா? இல்லையா என்ற கேள்விகளையெல்லாம் எழுப்பி உருவமில்லாதவர்; அவர் எங்கும் நிறைந்திருப்பவர்; அவர் உண்மையாக—மெய்யாக இருப்பவர்; அன்பாக இருப்பவர் என்கின்ற கருத்தை அன்றைக்குத் திருவள்ளுவர் எடுத்துக் காட்டினர் என்கின்ற அளவிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமேயல்லாமல், வள்ளுவரே கடவுள் இல்லை என்றுதான் சொன்னர் என்று வள்ளுவரை நம் பக்கம் இழுப்பது வள்ளுவர் மேல் நம்முடைய கருத்தைத் திணிப்பதாக ஆகும்.

எனவேதான் அப்படிப்பட்ட புரட்சிகரமான கருத்துக்களை வள்ளுவர் மேல் திணிக்கிற நேரத்தில் நான் அதை ஏற்றுக் கொள்வதில்லை.

அன்றைக்கு, அந்த காலக் கட்டத்திலே அவர் செய்த சீர் திருத்தங்கள் அவர் செய்த சமுதாயப் புரட்சி! இன்னும் சொல்லப்போனால் திருக்குறள் ஒரு வாழ்க்கை நெறி! வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை வகுத்துக் கொடுக்கும் ஒரு நூல்!

அதன் உரைகளிலே இன்றைக்குச் சில மாற்றங்கள் தேவைப் படுகின்றன. இப்போதே சிலர் வள்ளுவரை தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ள முயல்வதைப்போல அன்றைக்குப் பரிமேல ழகர் போன்றவர்கள் தங்களுடைய கலாச்சாரத்திற்கு ஏற்ப வள்ளுவரை இழுத்துக் கொள்ள முயன்றார்கள்.

கலைக்களஞ்சியம் அப்துற்றகீம் அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

இதற்கு பரிமேலழகருடைய உரை என்ன?

தக்கார் — தகவிலர்; தகுதியுள்ளவரா? தகுதியற்றவரா? நல்லவரா? தீயவரா? என்பதை அறிந்து கொள்ள வழி என்ன வென்றால் — அவர்களுடைய எச்சத்தால் காணப்படும் — அவர் களுடைய பிள்ளைகளைக் கொண்டுதான் அதைக் கணக்கிட வேண்டும்.

—இப்படி உரை எழுதப்பட்டது. அந்த உரை சரியானதாக இருக்க முடியுமா? என்று அப்துற்றகீம் கேட்டார்.

இன்றுள்ள எடுத்துக்காட்டுகளைப் பார்க்கும் போது பிள்ளையைக் கொண்டுதான் தகப்பனைக் கணக்கிட வேண்டு மென்றால், பிரகலாதனைக் கொண்டு இரணியனைக் கணக்கிட முடியுமா?

இரணியன் அரி என்கின்ற பெயரையே உச்சரிக்கக் கூடாது என்றவன்! பிரகலாதன் உச்சரித்தே தீருவேன் என்றவன்!

என் பெயரைத்தான் உச்சரிக்க வேண்டும். "இரண்யாய நமஹ" என்றவன் இரணியன். சொல்ல முடியாது என்றவன் பிரகலாதன்.

இதில் நான் யார் கட்சி என்று என்னைக் கேட்காதீர்கள். இங்கே சொல்ல வேண்டிய அவசியமுமில்லை.

நான் இரணியன் கட்சியாகக் கூட இருக்கலாம்; உங்களிலே பலர் பிரகலாதன் கட்சியாகக் கூட இருக்கலாம்.

ஆனால் பிரகலாதனை வைத்து இரணியனைத் தீர்மானிக்க முடியுமா? முடியாது.

எச்சத்தாற் காணப்படும் — அவர்களுடைய பிள்ளை குட்டிகளால் காணப்படும் — மக்களால் காணப்படும் என்றுல் பிரகலாதனை வைத்து இரணியன் தக்காரா? தகவிலரா? என்று யாரும் சொல்ல முடியாது.

அவ்வளவு ஏன்? உத்தமர் காந்தியடிகளுடைய பிள்ளைகளை வைத்து—அவர்களுடைய நடவடிக்கையினை வைத்து—அவர்களுடைய தந்தை காந்தியடிகளே இப்படித்தான் என்று எண்ணினுல் —திருக்குறளின்படி அப்படித்தான் இருக்கவேண்டும்என்றுல், யாராவது ஏற்க முடியுமா?

எனவே எச்சத்தால் காணப்படும் என்றுல் என்ன? கலைவாணர் என். எஸ். கே. ஒரு முறை அழகாகச் சொன்னர்.

மரணமடைந்த ஒருவனுடைய உடலை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும்போது திண்ணையில் அமர்ந்திருக்கிற இருவருக்குள்ளே வாதம், "அதோ செல்லுகிருனே அவன் நல்லவனு? கெட்டவனு?" என்று.

ஒருவனை அனுப்பிப் போய்ப் பார்த்துவிட்டு வா என்று சொல்கிருர்கள்.

போனவன் திரும்பி வருகிருன், வந்தவன் 'பின்னுல் செல்கிறவர்களெல்லாம் அழுதுகொண்டே போகிருர்கள்' என்று சொல்கிருன்.

அப்பொழுது தீர்மானித்தார்கள் இவர் தக்கார் — நல்லவர்; அந்த காரணத்தினுலேதான் பின்னுல் செல்கிறவர்கள் அத்தனை பேரும் அழுகிருர்கள் என்று.

மறுநாள் இன்னெரு சவம் சென்றது. பின்னுல் ஓர் ஆளை அனுப்பி என்ன பேசிக்கொண்டு போகிருர்கள் என்று கேட்டு வரச்சொன்னர்கள்.

'அப்பா! தொலைந்தான் பாவி! ஊரைக் கொடுத்துக் கொண்டிருந்தான்' என்று பேசிக்கொண்டு செல்கிருர்கள்.

அவன் வைத்துவிட்டுப்போன எச்சம் அதுதான்.

அதிலிருந்துதான் ஒருவர் தக்காரா? தகவிலரா? என்று கணக்கிட முடியும். அதனுல் இதுதான் உண்மையான உரையாக இருக்க முடியும்.

பரிமேலழகர் அதற்கு வேறு உரை செய்ததை ஏற்றுக் கொள்ள இயலாது,

தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

இதற்குப் பரிமேலழகருரையைப் பின்பற்றிப் பலபேர் உரை எழுதியிருக்கிறார்கள்.

என்ன பொருள் அதற்கு? ''தெய்வத்தைக் கூடத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுகிற ஒரு பெண் பெய் என்று சொன்னால் மழை பொழியும்''.

இந்தக் குறளை நம்புகிறவர்கள் வீட்டுக்குப் போய்ப் பரிமேலழகர் இப்படித்தான் சொல்லியிருக்கிறார் என்று தன்னுடைய மனைவியை அழைத்து ''மழை பொழியச் சொல்'' என்று சொல்லி, அந்த அம்மா தெருவுக்கு வந்து ''மழையே யொழி'' என்று சொல்லிப் பொழியா விட்டால் வீடு என்ன ரகளைப்படும்?

''நீ கற்பரசியாக இருந்தால் சொன்னவுடன் மழை பொழிந்திருக்குமே? இல்லாத காரணத்தினுல்தானே மழை பொழியவில்லை'' என்று எவ்வளவு சந்தேகங்கள் ஏற்படும்?

இதற்குத்தான் புரட்சிக் கவிஞர் — நான் தொடக்கத்திலே சொன்னதைப் போல திணித்து உரை காணவில்லை. சரியான உரை கண்டார்.

''தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்''— தெய்வத்தைக் கூடத் தொழாமல் தன்னுடைய கணவனையே தெய்வமாகத் தொழுகிற பெண் இருக்கிறாளே அவள்; ''பெய் எனப்பெய்யும் மழை'' — ஓர் உழவன் தனக்கு மழை தேவை என்று வானத்தைப் பார்த்துப் பெய் என்று சொல்கிற நேரத்திலே பெய்கின்ற மழைக்கு ஒப்பானவள் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அதற்குப் புது உரை கண்டார்-புதுஉரை என்று சொல்லமாட்டேன்—சரியான உரை கண்டார்.

இல்லாவிட்டால் அது சாஸ்திர சம்பிரதாயங்கள் இவைகளுக்கு ஆட்பட்ட உரையாக மாறி பெண் சமுதாயத்தை இழிவு படுத்துகின்ற உரையாக ஆகியிருக்கும்.

எனவேதான் நாம் பழமைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கமுடியாது. பழமைகள் அனைத்தையும் உதறிவிடக் கூடியவர்களாகவும் இருக்க முடியாது. பழமையை எருவாக்கிக்கொண்டு புதியபுதிய மலர்களை உருவாக்க வேண்டும். பழமை புதுமைகளுக்கு எருவாக வேண்டும்.

எருவாகப் போடுகின்ற காரணத்தால் 'ஐயோ பழமையைப் புதைக்கிறார்கள்' என்று எண்ணக்கூடாது.

பழமை புதைக்கப் பட்டால் தான்-அது எருவாக மாறினால் தான் — நல்ல மணமிக்க மலர்கள் — சமுதாயத்திற்குக் கிடைக்க முடியும். அந்தப் பணியை நாம் செய்ய வேண்டும்.

அப்படிப்பட்ட பணித்தொடரில் அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற பணி சாதாரணமானது அல்ல; மிகப்பெரும் பணி.

சீறுப் புராணத்திற்கு இரண்டு காண்டங்களுக்கு — அவர் இன்னுங்கூட அதற்கு முழுமையாக உரை எழுதி முடிக்காவிட்டாலுங்கூட — அவர் எழுதியிருக்கின்ற உரையும் விளக்கமும் விரிவுரைகளும் என்னை மிகவும் கவர்ந்தவை.

அவற்றில் ஒன்றிரண்டை உங்கள் முன்னுல் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் இடத்தில் உமறுப்புலவர் ஒரு நிகழ்ச்சியை உவமைகள் மூலம் விளக்குகிறார். அதற்கு உரை எழுதுகின்ற அண்ணன் ஷெரீப் அவர்கள் தன்னுடைய அறிவாற்றலையும் ஆய்வு ஆற்றலையும் எழுத்தாற்றலையும் வடித்துக் காட்டுகிறார்.

ஆமினு அம்மையாருடைய கணவர் அப்துல்லா. இவர்கள் நபிகள் நாயகத்தினுடைய தந்தையார்! அப்துல்லா கர்ப்பமுற்றிருக்கிற தன்னுடைய மனைவியைவிட்டு மதீனு சென்றிருக்கிற நேரத்தில் மதினுவிலே நோய்வாய்பட்டு மறைந்து விடுகிறார் என்ற செய்தி வருகிறது.

செய்திகேட்டு ஆமினு அம்மையார் அளவற்ற துயரமடைகிறார். அந்த இடத்தை உமறுப்புலவர் வருணிக்கிறார்.

''வருந்தி நொந்தழுது ஆமினு விடைதலும் வளைந்து
திருந்திழைக்கொடி மடவியர் இரங்குதல் திரன்முத்து
இருந்த சூல்வலம்புரியினைச் சூழ்ந்த சங்கினங்கள்
இரைந்து இரங்குவ போன்றன எங்கணும் நிறைந்தே''

ஆமினு அம்மையார் சோகத்தால் வாடிக்கிடப்பது எப்படி இருக்கிறதென்றுல், அந்த அம்மையாரைச் சுற்றி அந்த ஊர்ப் பெண்களெல்லாம் சூழ்ந்திருப்பது எப்படி இருக்கிறதென்றுல், ஒரு வலம்புரிச் சங்கைச் சுற்றிப் பல வெண் சங்குகள் சூழ்ந்திருப் பதைப் போல இருக்கிறது என்று உமறுப்புலவர் குறிப்பிடுகிறார்.

இதற்கு உரை எழுதிய அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்கள் ஆமினு அம்மையாரை வலம்புரிச் சங்காக எடுத்துக் காட்டிவிட்டு, சுற்றி அமர்ந்திருந்த பெண்களெல்லாம் வெண் சங்குகளாக இருந்தார்கள் என்பதையும் எடுத்துக் காட்டிவிட்டு, அதோடு நிறுத்தாமல்—இதற்கு உட்பொருள் ஒன்று இருக்கிறது; உமறுப்புலவர் அந்த உட்பொருளைத் தன்னுடைய உள்ளத்திலே வைத்துதான் அதை எழுதியிருக்கிறார் என்று அழகுபட அதற்கு ஒரு விளக்கமளிக்கிறார்.

வலம்புரிச் சங்கு ஊதாமலே — தானே ஒலித்துக் கொண் டிருக்கக் கூடிய இயல்பு வாய்ந்தது. அதை வாயிலே வைத்து ஊத வேண்டியதில்லை. வலம்புரிச் சங்கில் காற்றுப்படுகிற நேரத் தில் தானாக அதிலிருந்து ஒலி எழும். மற்ற சங்குகள் ஊதினுல் தான் ஒலிக்கும்; ஊதா விட்டால் ஒலிக்காது.

ஆமினு அம்மையார் உண்மையிலேயே தனது கணவன் மறைந்த விட்ட காரணத்தால் யாரும் தூண்டாமலே அழுது கொண்டிருக்கிறார்கள், வலம் புரிச் சங்கு போல! மற்ற பெண் களெல்லாம் ஏதோ ஒப்புக்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள், வெண் சங்குகளைப் போல.

ஏன் ஒப்புக்கு உட்கார்ந்திருக்கிறார்கள் தெரியுமா? அதையும் அண்ணன் ஷெரீப் விளக்குகிறார்.

ஆமினு அம்மையார் மதினுவைச் சேர்ந்தவர். அப்துல்லா விற்கு மக்காவிலே பெண் எடுக்காமல் மதினுவிலே பெண் எடுத்த காரணத்தினுல் மக்காவிலே உள்ள பெண்களெல்லாம் ஏற்கனவே கோபமாக இருக்கிறார்கள். எனவே அந்தப் பெண்ணுக்கு, ஒரு துயரம் வந்து விட்ட காலத்தில் அதைப் பற்றிக் கவலைப்படாமல் அந்தப் பெண்களெல்லாம் அழாமல் ஊதப்படாத சங்குகளைப் போல — வெண்சங்குகளைப் போலச் சூழ அமர்ந்திருக்கிறார்கள் என்று அண்ணன் ஷெரீப் அவர்கள் விளக்குகின்ற அந்த நேர்த்தியைக் கண்ட போது, நான் உள்ளபடியே பெரும் வியப்புற்றேன்.

அது மாத்திரமல்ல, நபிகள் நாயகம் பிறந்த பொழுது உமறுப்புலவர் ''அகமது பிறந்தார்'' என்று சொல்வதைக் குறிப்பிட்டு விட்டு ''ஆம்; அகமது என்றுதான் உமறு குறிப்பிடு கின்றார். அது அச்சுப் பிழை அல்ல. முகமது என்று குறிப்பிடு வதற்குப் பதிலாக அகமது என்று குறிப்பிட்டு விட்டார் என்று யாரும் கருதத் தேவையில்லை.

அகமது என்றுதான் உமறுப்புலவர் குறிப்பிட்டிருக்கிறார். காரணம், பிறந்த பொழுது அவருடைய அன்னையார் அவருக்கு இட்ட பெயர் அகமது என்பதுதான்.

தாயை நேசிக்கக் கூடிய — தாயினிடத்திலே பற்றுக் கொண் டுள்ள நபிகள் நாயகம் அவர்கள், தம்முடைய அந்தத் திருப் பெயரை முதலிலே கொண்டிருந்தார். பிறகுதான் முகமது ஆனார். எனவே அகமதுதான் அவருடைய இயற்பெயர்—முதற் பெயர் என்பதையும் அண்ணன் ஷெரீப் அவர்கள் மிக அழகுபடச் சுட்டிக்காட்டுகின்றார்.

இன்னொன்று நபிகள் நாயகம் இந்த மார்க்க போதனைகளைச் செய்தபோது முதல் உறுப்பினராக இஸ்லாம் மார்க்கத்திலே முதலிலே தன்னை இணைத்துக் கொண்டவர் கதீஜா அம்மையார்; அதற்கு அடுத்து அபுபக்கர். அதற்கு அடுத்து அலி; நான்காவ தாக ஜைது என்பவர். அதற்கு உமறுப் புலவருடைய பாடல்.

அடிமையி லோங்கில அறிவின் மிக்கவர்
வடிவுறும் ஆரிதா மதலையாகிய
மிடலவர் சைதெனும் வீரகேசரி
இடர் அறுங் கதி, இசுலாமி லாயினர்''

—இது உமறுப் புலவருடைய சீறுப் புராணப் பாடல். இதற்கு விரிவுரை அண்ணன் ஷெரீப் அவர்களால் எழுதப் பட்டிருக்கிறது.

ஹாரிதா என்பவர் ஏமான் பகுதியைச் சேர்ந்த ஒரு கிறித்தவர். அவர் அடிமை வியாபாரம் செய்கின்ற ஒருவரிடத் தில் தன்னுடைய மகன் ஜைதை ஒப்படைக்கிறார். அவர் அந்தச் சிறுவனை விலை கொடுத்து வாங்கி கதீஜா அம்மையாரிடத்திலே விற்றுவிடுகிறான். அம்மையாரிடத்திலே அந்த அடிமைச் சிறுவன் ஜைது பணியாற்றிக் கொண்டிருகிறான்.

கதீஜா அம்மையார் நபிகள் நாயகத்தை மணந்து கொண்ட பிறகு, அவருக்குக் குற்றேவல் புரிவதற்காக ஜைது என்ற அந்த இளைஞனை - அடிமையாக வாங்கப்பட்ட பையனை — அனுப்பி வைக்கிறார்.

நபிகள் நாயகம் ''அடிமையாக அவனை ஏற்றுக் கொள்ள மாட்டேன்; என்னுடைய வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

ஆக, இருபது அம்சத்திட்டம் வந்து தான் கொத்தடிமை ஒழிந்தது என்று யாரும் கருதிக் கொள்ளாதீர்கள். கொத்தடிமை ஒழிப்புத் திட்டத்தை அன்றைக்கே நபிகள் நாயகம் அவர்கள் செயல்படுத்திவிட்டார். ஜைது என்கின்ற அந்த அடிமை இளைஞன் குற்றேவல்புரிவதற்காகத் தம்முடைய அருமைத் துணைவியார் கதீஜா அம்மையாரால் அனுப்பப்பட்ட அந்த காலத்திலே 'நான் அவனை அடிமையாக ஏற்றுக்கொள்ள மாட்டேன்; என்னுடைய வளர்ப்பு மகனாக ஏற்றுக்கொள்கிறேன்' என்று மகனாக ஏற்றுக்கொண்டார்.

அந்தக் காரணத்தினாலே தான் அவன் வீரகேசரி ஆனானும்.

அதற்கு விளக்கம் கூறுகிறார்; உரை எழுதியதோடு நிறுத்தாமல் வரலாற்றுக் குறிப்புகளையும் தருகிறார்.

அவன் எப்படி வீரகேசரியானான் என்பதற்கு அண்ணன் ஷெரீப் விளக்கம் தருகின்றார். மூத்தாப் என்கின்ற பகுதியிலே நடைப்பெற்ற போராட்டத்தில் ஜைது; தான் மேற்கொண்ட அந்த மார்க்கத்திற்காக ஒரு தளபதியாக நின்று களத்திலேயே உயிர் விட்டான். யாரால் வளர்ப்பு மகனாக ஏற்றுக்கொள்ளப் பட்டானோ அந்த நபிகள் நாயகத்தினுடைய தளகர்த்தனாக மூத்தாப் போராட்டத்தில் தன்னுடைய உயிரையே கொடுக்கின்ற மாவீரனாக — வீரகேசரியாக விளங்கினான். இந்த வரலாற்றுக் குறிப்பும் இந்த உரையிலே இருக்கிறது.

வெறும் பதவுரை, பொழிப்புரை என்றில்லாமல் வரலாற்றுக் குறிப்புரையாகவும் இந்த சீறுப் புராண விளக்கவுரை திகழ்கிறது என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும்!

இன்னோரிடத்தில், நபிகள் நாயகத்தை உணராதவர்களைப் பற்றி உமறுப் புலவர் சொல்லுகின்ற வாசகத்திற்கு — அந்தப் கவிதை வரிகளுக்கு— அண்ணன் ஷெரீப் தருகின்ற விளக்கத்தைக் பாருங்கள்!

உமறுப் புலவருடைய அந்தக் கவிதை வரி:

"கண்படைத்தவர் இவர் எழில் காண்பவர் முகத்திற்
புண் படைத்தவர் இவர் தமைக் காண்கிலார்"

இவருடைய எழிலை காண்பவர்கள் கண் படைத்தவர்கள். இவருடைய எழிலை உணராதவர்களெல்லாம் முகத்திலே இரண்டு புண்களைப் படைத்தவர்கள்.

இது உமறுப் புலவருக்கே உரிய உவமை என்று அண்ணன் வாதாடவில்லை.

திருக்குறளினுடைய தாக்கம் என்று திருக்குறளுக்குத் தரவேண்டிய பெருமையை தருகின்ற வகையில் திருக்குறளைக் குறிப்பிட்டு,

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என்று

திருவள்ளுவரின் கவிதை வரிகளைப் பின்பற்றி உமறுப் புலவர்

"கண்படைத்தவர் இவரெழில் காண்பவர் முகத்தில்
புண்படைத்தவர் இவர் தமைக் காண்கிலார்" என்கிறார்.

எழில் காண்பவர் என்றால் அவருடைய அழகைக் காண்பவர்கள் எல்லாம் கண் படைத்தவர்கள்; அவருடைய அழகைக் காணுதவர்களெல்லாம் கண் படைக்காதவர்கள் என்று யாரும் பொருள் எடுத்துக் கொண்டு, அழகைக் கண்டாலே போதும் என்கின்ற முடிவுக்கு வந்து நாசமாகிப் போய்க் கொண்டிருக்கின்ற நாட்டை மேலும் நாசமாக்கி விடக்கூடாது.

அப்படிக் கருதித்தானே என்னவோ அண்ணன் ஷெரீப் அவர்கள் எழில் என்றால் என்ன என்று விளக்கமளிக்கிறார். அந்த விளக்கத்திற்கு முன்பு சில கருத்துக்களைச் சொல்கிறார்.

ஏன் நபிகள் நாயகத்தைக் காணவேண்டும் — காணுகின்ற அந்தப் பேறினைப் பெற வேண்டும் என்பதற்கு அண்ணன் தருகின்ற விளக்கம்: இறைவன் இரண்டென்று சொன்னாருண்டோ? இறைவனுக்கு உருவமில்லை என்பதை ஏற்காதவராருண்டோ? பிறப்பால் மனிதர் யாரும் சமம் என்பதை இசைக்கார் உண்டோ? பொய், களவு, குடி, சூது, விபச்சாரம்,

வட்டி வாங்கல், நிறபேதம், மொழிபேதம், நிலபேதம் நீக்கி ஆண் பெண் அனைவரும் சமமாக வாழவேண்டும் என்கின்ற கருத்தைத் திதெனச் செப்பிய வருண்டோ? இவற்றையொத்த ஒழுக்க நெறிகளைப் போதித்தவர் நபிகள் நாயகம்.

எனவேதான் உமறுப் புலவர்;

''கண்படைத்தவர்இவர் எழில் காண்பவர் முகத்தில்
புண்படைத்தவர் இவர் தமைக் காண்கிலார்''

என்று குறிப்பிடுகிறார் என்று சொல்லிவிட்டு, எழில் என்றால் என்ன தெரியுமா? நபிகள் நாயகம் தோற்றப் பொலிவு உள்ளவர். இருந்தாலுங்கூட அந்த எழிலை மாத்திரம் உமறுப் புலவர் குறிப்பிடவில்லை.

எழிலென்றால் கருத்தெழில், கொள்கை எழில், குண எழில் குறிக்கோள் எழில். இந்த எழிலைக் காணுதவர்களெல்லாம் முகத்தில் கண் படைக்காமல் புண் படைத்தவர்கள். இந்த எழிலை உணர்ந்தவர்கள்தான் — கருத்தை, கொள்கையை, குணத்தை, குறிக்கோளை உணர்ந்தவர்கள்தான் — கண் படைத்தவர்கள் என்று ஓர் அருமையான விளக்கத்தை அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்கள் இந்தச் சீறுப்புராண வரிகளுக்குத் தந்துள்ளது மிக மிகப் போற்றுதற்கு உரியதாகும்.

இன்னொன்று ''மானுக்கு துணை நின்ற படலம்'' என்று ஒரு படலம். அதிலே இருக்கின்ற கவிதைகளை நான் படித்துப் படித்து மகிழ்ந்தேன்.

அருவி போன்ற தமிழ் ஓட்டம்!

ஆற்றுப் பெருக்கு போன்ற வளமான சொற்கள்.

அப்படிப்பட்ட கவிதைகளை ''மானுக்குத் துணை நின்ற படலம்'' என்ற படலத்திலே நான் படித்தேன்.

மான் ஒன்றைக் காப்பாற்றுவதற்காகத் தானே அதற்குப் பிணையாக நிற்கிறார் நபிகள் நாயகம் என்பது. அந்த மான் பேசுவதாகக் கற்பனை செய்யப்பட்டிருக்கிறது, நான் ஜாக்கிரதையாக கோடிட்டுச் சொல்கிறேன்— கற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அது பேசியது என்று யாராவது சொல்வார்களேயானால் அது அவர்களுடைய நம்பிக்கை! அவர்களுடைய கருத்து! நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இங்கே மாத்திரம் மான் பேசுமா? நீ ஏற்றுக்கொள்கிறாயா? என்று யாராவது கேட்பாரேயானால் நான் அவருக்குச் சொல்கிறேன். நரி காக்கையைப் பார்த்துப் பேசிய கதையைப் படித்திருக்கிறோமல்லவா? "காக்கா! காக்கா! ஒரு பாட்டுப் பாடு!" என்று; அது போல் இதை எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும். இதன் உட்பொருள் என்ன? நபிகள் நாயகம் எவ்வளவு இரக்க சிந்தை படைத்தவராக—விலங்குகளுக்குக்கூட கருணை காட்டிக் கூடியவராக இருந்தார் என்பதையும், அதே நேரத்திலே அளிக்கப்பட்ட உறுதிகளைக் காப்பாற்றுவதில் விலங்குகள் கூட எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டன என்பதைக் கற்பனையாக எடுத்துக் காட்டுகின்ற படலம்தான் இந்தப் படலம் என்பது எனது கருத்து!

மான் கூட்டம் ஒன்று. அந்த மான் கூட்டத்தில் ஒரு வேடன் நுழைகிறான். அந்த மான்களில் ஓர் ஆண் மான்; ஒரு பெண் மான், அப்பொழுதுதான் இரண்டு நாளைக்கு முன் பிறந்த அவைகளுடைய குட்டி மான். வேடன் நுழைந்து அம்பை எய்தி விரட்டுகிற நேரத்தில் மான் கூட்டம் சிதறி ஓடுகிறது. அப்படி ஓடும்பொழுது மூன்று நாளைக்கு முன்பு ஒரு கன்றினை ஈன்ற பெண் மான் மாத்திரம் வேடன் கையிலே சிக்குகிறது. அதைக் கட்டி இழுத்துக் கொண்டு வருகிறான்.

வருகிற வழியிலே நபிகள் நாயகம் வருகிறார்.

அவரை அந்தப் பெண் மான் பார்த்துச் சொல்கிறது. "என்னைக் காணுமல் என்னுடைய இனமான கலை — ஆண் மான் இருக்கிறதே அது—எந்த அளவுக்குத் துன்பப்படுகிறதோ சொல்ல முடியாது. அது இலைகளைக் கூடத் தின்னுது — தன்னுடைய பசி தீர்த்துக் கொள்ளக் கூட எண்ணுது. எண்ணி எண்ணி உருகிக் கொண்டிருக்கும் என்னுடைய கணவனை அந்த ஆண் மான். எனவே என்னை விட்டுவிடச் சொல்க" என்று கேட்கிறது.

மூன்றுநாள்கூட ஆகவில்லை, குழந்தை பிறந்து, அது பாலின்றிக் தவிக்கும். அதற்காகவாவது என்னை விட்டு விடச் சொல்க! என்று மீண்டும் கெஞ்சுகிறது அந்த மான்.

பெருமகளார் நபிகள் நாயகம் அந்த வேடனைப் பார்த்து; "நீ அந்த மானை விட்டுவிடு" என்று சொல்கிறார். வேடனோ முடியாது என்கிறான்.

அந்த மான்; ''என்னை விட்டுவிட்டால் நான் சென்று என்னுடைய குழந்தைக்குப்பால் கொடுத்து விட்டுத் திரும்ப இங்கேயே வந்து விடுகிறேன்'' என்று சொல்கிறதே என்கிறார்.

யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? என்கிறான் வேடன். நபிகள் நாயகம் ''அப்பா அந்த மானினுடைய கருத்துப்படி அதை விட்டுவிடு. அது திரும்பி வரும். வராவிட்டால் அதற்குப் பிணையாக நான் இருக்கிறேன் — ஜாமீன் நான் தருகிறேன்'' என்கிறார்!

இந்தக் காலத்தில் ஜாமீன் தருவதென்றால் எவ்வளவு பயப்படுகிறோம். அவரோ ஒரு மானுக்கு ஜாமீன் தருகிறார்.

''பிணையாக நான் வருவேனப்பா. நீ அந்த மானை விட்டு விடு. நிச்சயம் திரும்பிவரும். அது திரும்பிவராத பட்சத்தில் நான் இருக்கிறேன். அதற்குப் பதிலாக இரண்டு மான்களை உனக்குத் தருகிறேன். குட்டிக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று குழறுகிறது. எனவே அதை அனுப்பிவை'' என்று நபிகள் நாயகம் நீண்டநேரம் வாதாடிய பிறகு, ஒரு மானுக்கு இரண்டு மானுகத் தருகிறேன் என்று சொல்கிறாரே நபிகள் நாயகம் என்று நம்பி, அதை ஏற்றுக்கொண்டு ''சரி போய் விரைவிலே வா! ''என்று அந்தப் பெண்மானை வேடன் அனுப்பி வைக்கிறான்.

அப்படி அனுப்பிவைக்கின்ற பொழுது அந்த பெண்மான் வனத்திலே செல்லும் காட்சியை உமறுப்புலவர் வருணிக்கிறார்.

''வெண்ணிலாக் கதிர்கான் றென்ன
மென்முலை சுரந்த தீம்பான்
மண்ணெலா நனைப்பச் சூழ்ந்த
வனமெலாம் திரிந்து தேடிக்
கண்ணினி லினங்காணுது
கலங்கியோர் வனத்தின் கண்ணே
யென்னரும் பிணையுங் கன்றும்
கலையுடன் இனிது கண்ட''

தன்னுடைய ஆணையும் தாங்கள் பெற்றெடுத்த குழந்தையையும் அதன் மான் தேடி ஓடுகிறது!

அப்படி ஓடும்போது அந்தப் பெண்மானுடைய மார்பு வீங்கி மென் முலை சுரந்த தீம்பால் — அந்த மென்மையான மார்பிலே யிருந்து வடிகின்ற அந்தப் பால் எப்படி இருக்கிறதென்றால் வெண்ணிலா கதிர் கான்றென்ன" — வெண்ணிலாவைப் போல அந்த வெண்ணிறமான பால் பொழிகிறது.

அப்படிப் பொழிகிற பால் "மண்ணெலாம் நனைக்கிறது." இதோடு உமறு விட்டுவிட்டார்; ஷெரீப் விடவில்லை.

அவர் சொல்கிறார். வெண்ணிலாப் போல நிறத்தை மாத்திரம் உமறு குறிப்பிட்டார் என்று சொல்லக்கூடாது. வெண்ணிலாவின் ஒளி பால் ஒளி.

ஒரு மானினுடைய பால் மண் முழுவதும் பரவியதாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் வெண்ணிலா ஒளி வானத்திலே இருந்து பாயும் பொழுது மண் முழுதும் பாயுமல்லவா? அந்த ஒளி பாய்வது போலப் பால் பாய்ந்தது என்று அந்த ஒளியோடு ஒப்பிடுகிறார் உரையெழுதிய—விளக்கம் எழுதிய கவி. கா. மு. ஷெரீப் அவர்கள்.

அப்படித் தேடிச் சென்ற அந்தப் பெண் மான் ஆணையும் கன்றையும் கண்டவுடன்,

"கலையினுள் வருத்தம் தீர்த்துக்
கன்றினை அணைத்து விம்மும்
முலையினை யூட்டி மென்மை
முதுகுவாலடி நா நீட்டி
யலைதர வளைத்து மோந்து
வேட்கையை அகற்றிற்றன்றே!"

ஆண்சுகமாக இருக்கிறது என்று வருத்தந் தீர்ந்தது. அவைகளை அடைந்து விட்டோமே என்று வருத்தந் தீரவில்லை. ஆண் மான் சுகமாக இருக்கிறது என்று வருத்தந் தீர்ந்தது.

— ஆணையும் கன்றையுங்காண வேண்டும் என்ற அந்த ஆசை அடங்கிற்று என்றும் பொருள் கூறி விட்டு மீண்டும் அண்ணன் ஷெரீப் சொல்கிறார்.

"வேட்கையை அகற்றிற்றறேன்"

என்பதற்கு ஆவலைத் தீர்த்து கொண்டது என்றும் பொருள் கொள்ளலாம். இதோடு சரி இந்தப் பற்று. ஏனென்றால் திரும்பச் செல்ல வேண்டுமல்லவா? எனவே அந்தப் பற்றை அது அகற்றிக் கொண்டது என்று மேலும் அதற்கு ஒரு விரிவான உரையை அண்ணன் ஷெரீப் அவர்கள் எழுதிக் காட்டுகின்றார்கள்.

அது மாத்திரமல்ல; அதற்குப் பிறகு - பால் கொடுத்து முடிந்த பிறகு—பெண்மான் ஆண்மானிடத்தில் ''நான் இப்படி உறுதியளித்து விட்டு வந்திருக்கிறேன், எனக்கு பதிலாக நபிகள் நாயகம் அங்கே பிணை இருக்கிறார். நான் அங்கே செல்ல வேண்டும்'' என்று சொன்னதும் ''இது என்ன பைத்தியக்காரத் தனம்? அதெல்லாம் போகக்கூடாது!'' என்று எல்லா மான்களும் சொல்கின்றன.

அப்போது அந்தப் பெண்மான் சொல்கிறது. நேர்மை, நாணயம் இவைகளுக்கெல்லாம் அந்த மார்க்கத்திலே எவ்வளவு இடந்தரப் பட்டிருக்கிறது என்பதற்கு சான்று நாம் காண்கிறோம்.

பெண்மான் சொல்கிறது:

''சிறப்புடைக் குரிசின் முன்னர்
செப்பிய மாற்ற மாறி
மறப் பொடு மிருந்தே னுகில்
வரிப்புலி இனத்தின் வாய்ப்பட்
டிறப்பதே சாத மல்லால்
இருப்பதற் கிடமற் றுண்டோ?''

சிறந்த ஒரு பெரியவருக்கு முன்னால் நான் அளித்த வாக்குறுதியை மாற்றி விட்டு இங்கே இருப்பதைவிட ஒரு புலியின் வாயிலால் கடிபட்டு சாவது மேல்; உயிரோடு வாழ்வது மேலல்ல; வாக்குறுதி தவறி வாழ்வதை விடச் சாவது மேல் ... என்று ஒரு மான் சொல்வதும், பிறகு அந்தமான் கன்றையும் அழைத்துக்கொண்டு அந்த வேடனிடத்திலே செல்வதும், வேடன் கருணை கொண்டு தன்னுடைய தவறுக்கு வருந்தி நபிகள் நாயகத்தினுடைய காலடியிலே விழுவதும், அவர் அவனை ஏற்றுக்கொள்வதும் அந்தப் படலத்தினுடைய தொடர் நிகழ்ச்சிகள்.

இவைகளை யெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம் விலங்கினங்களுக்குக்கூட நேர்மை, நாணயம் ஆகியவை இருக்கும் என்பதைப் போதிப்பதன் மூலம், அந்த வாக்குறுதி மாறுத தன்மை மனிதர்களுக்கு வரவேண்டும் என்பதை யூகிக்கின்ற அளவிற்கு இந்த வரலாற்றுப் பழந்தொகுப்பு — சீறுப்புராணம் இருக்கின்றது என்பதை நான் எடுத்துக்காட்டி, இப்படிப்பட்ட ஓர் அருமையான உரையைத் தமிழுக்கு — தமிழர்களுக்கு — தமிழ் இலக்கியத்திற்குத் தந்துள்ள அண்ணன் கவி. கா. மு. ஷெரீப் அவர்களைப் பாராட்டி, அவர்கள் நெடிது நாள் வாழ்ந்து நம் முடைய சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்க் 'கா. சு.' நூலகம்,
சுப்பரவழிவுஅகம் - குழித்தலை.

தலைமைக்கழக வெளியீடுகள்

*

அண்ணாவின் மாநில சுயாட்சி முழக்கம்	ரூ. 0.50
கலைஞர் தொடுத்த கணைகள்	5.00
உண்மைகளின் வெளிச்சத்தில்	1.00
தொடங்கினேம் தொடர்வோம்	1.00
மாநில சுயாட்சித் தீர்மானம்	2.00
இன உணர்வு	0.50
கொள்கையில் கோகினூர்	1.50
கலைஞர் வாழ்க	4.00
ஐ.நா. சபைக்கு தலைவர் கலைஞர் முறையீடு	0.50
எட்டப்பர்கள் ! எச்சரிக்கை !	1.00
தியாக வரலாறு	1.00
அண்ணா ஜோதி	0.50
முக்கனி	3.00
தமிழே மூச்சு	1.00
பஞ்சாப் பூகம்பம்	1.00
யாரால் ? யாரால் ?	1.00
ஆந்திராவும் இந்திராவும்	1.00
இந்திய ஜனநாயகம் எங்கே போகிறது	1.50
கலைஞர் மேலவைப் பேருரை	1.50
கலைஞர் மேதின முழக்கம்	1.00
இது ஓர் இனமானப் போர்	4.00
DMK on State Autonomy	2.00
The need of the Hour	1.00
Tamil Eelam-DMK Stand	1.50

Wrapper Printed at

Gem Press, Madras - 600 001.